# முதன்மை மாவட்ட நீதிமன்றம், காஞ்சிபுரம்

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | OS | 219 | of | 2024 |

2025–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 19–ம் நாளான இன்று

வாதி/பிரதிாவதி தரப்பில் 1–வது சாட்சியின் வாக்குமூலமானது 1873–ம் ஆண்டின் 10வது வட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திருமதி.Logeshwari, Translator, என்பவரால் சட்டத்தின் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜெகதீஸ்வரி | தந்தை பெயர் | |
| | | கணவர் பெயர் | |
| கிராமம் | | தாலுகா | |
| தொழில் | | வயது | |

நாள் 19.11.2025 – வா.சா2

**<u>முதல் விசாரணை</u>**

நான் திருநெல்வேலி மாவட்ட பதிவு அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து பெற்ற அழைப்பாணை அடிப்படையில் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியுள்ளேன். காஞ்சிபுரம் 1 இணை சார் பதிவாளர் அலுவலகம் காஞ்சிபுரத்தில் கடந்த 2021 ம் ஆண்டு பொறுப்பு சார் பதிவாளராக பணியாற்றிய போது 1669/2021 என்ற கிரைய ஆவணமும், 1739/2021 என்ற அடமான ஆவணமும் பதிவு செய்தார்கள்.

அப்போது மேற்படி இரண்டு ஆவணங்களை பற்றி மாவட்ட பதிவாளர் அலவலுகம் காஞ்சிபுரத்திலிருந்து கோதை அவர்கள் கொடுத்த மனுவின் பேரில் என்னிடம் அறிக்கை கேட்டார்கள். அதற்கு நான் 23.08.2021 தேதியிட்ட பதில் அறிக்கை கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வாசாஆ 24 நான் கொடுத்த அறிக்கை தான். அதனடிப்படையில் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து ஒரு உத்தரவு வந்ததது. அதனடிப்படையில் காவல் கண்காணிப்பாளர் நில மோசடி வழக்குகள் பிரிவு அவர்களுக்கு நான் ஒரு அறிக்கை அனுப்பியுள்ளேன்.

**1 மற்றும் 2 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வா.சா. 24 ஆவணத்தில் நான்காம் பத்தியில் கிருஷ்ணசாமி அவர்களுக்கு 25.3.1918 தேதியில் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் 6495/1942 சிக்ஸ் மூலம் பாத்தியப்பட்ட சொத்து எனவும், மேலும் மேற்படி ஆவண எண் 3748/2011 எல்லைகள் குறிப்பிடப்படாமல் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் கூறியுள்ளேன். 3748/2011 இல் பதிவு செய்யப்பட்ட பத்திரத்தில் எல்லைகள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பொதுவாக, முழு சொத்தை விற்பனை செய்தால் அதற்கான ஜக்குபந்தி விவரங்களை போடும் வழக்கம் இல்லை என்றால் பூரா என்று போடப்பட்டு முழு சொத்தும் விற்பனை செய்யப்பட்டால் அதற்கான ஜக்குபந்தி விவரங்கள் தேவையில்லை. என்னிடம் காட்டப்படும் வா சா 6 சர்வே எண் 13/1ஏஏசி என்ற ஆவணத்தில் 4 ½ சென்ட் நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ள 13/1ஏஏசி யில் குறிப்பிட்டுள்ள 2ம் அட்டவணை சொத்தில் ஜக்குபந்தி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நான் பதிவு செய்யவில்லை. வா சா 6 ஆவணத்தில் மொத்த 5 ஐடடங்கள் உள்ளது. அதில் எந்த ஐட்டத்திற்கு ஜக்குபந்தி விவரங்கள் போடவில்லை என்றால் சரிதான். ஒரு குறிப்பிட்ட சர்வே எண்ணில் அதில் உள்ள முழு

பரப்பளவும் விற்பனை செய்யப்பட்டால் ஜக்குபந்தி விவரங்கள் குறிப்பிடும் வழக்கம் இல்லை என்றால் சரியல்ல. அதே போல் வா சா ஆ 7 ல் அதே சர்வே எண்ணில் அதே நபர்கள் பதிவு செய்த பத்திரத்தில் சொத்து விவரங்களின் குறிப்பிட்டுள்ள 7 ஐட்டங்களிலும் ஜக்குபந்தி விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வா சா 24 அறிக்கையில் 2ம் பத்தியில் சர்வே எண் 13/1ஏசி குறித்து தான் ஆவணங்களை ஆய்வு செய்தேன் என்றால் சரிதான். 13/1 ஏசி ல் 20 சென்ட் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அது அந்த உட்பிரிவுக்கு உட்பட்ட மொத்த பரப்பளவு என்றால் அதைப் பற்றி தெரியாது. 13/1 ஏசி சர்வே எண்ணிற்கான மொத்த பரப்பளவு 20 செண்டு தான் என்றால் தவறு. நான் ஆய்வு செய்ததில் சர்வே எண் 13/1ஏசி ல் பரப்பளவு 18 1/2 சென்ட் இருந்தது என்று குறிப்பிட்டுள்ளேன். பரப்பளவு 18 1/2 சென்ட் என்பதை காண்பிக்கும் வகையில் நான் ஆதாரம் ஏதும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. எந்த ஆவணத்தில் 18 ½ சென்ட் இருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் அதற்கான ஆவணத்தை நான் எடுத்து வர தயாராக உள்ளேன். நான் கூறும் அந்த ஆவணத்தில் 20 சென்டில் 18 ½ சென்ட் என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் அதை நான் பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வா சா ஆ 9 ல்வாதி கிரையம் பெற்ற பத்திரத்தில மேற்படி சொத்திற்கு தற்போது புதிய நகரளவு எண் 17 மற்றும் 18 ல் அடங்கும் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். புதிய நகரளவு எண் 17 மற்றும் 18 என்ற எண்ணே இல்லை என்றும், ஆவணம் போலியானது என்றால் அது ஆவணங்களை சரிபார்த்து தான் சொல்ல முடியும். என்னுடைய அறிக்கையில் பத்தி 5 ல் அதன் பிறகு வரும் அனைத்து பதிவு களிலும் திருமதி கோதை அவர்களின் நிலத்திற்குரிய எல்லைகள் குறிப்பிட்டுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது. எதன் அடிப்படையில் கோதையின் நிலம் என்று

அறிக்கையில் கூறியுள்ளேன் என்றால் ஆவணங்களை ஆராய்ந்து தான் அவ்வாறு கூறியுள்ளேன். என்னுடைய அறிக்கையில் பத்தி 5 ல் நான் கூறிய விவரங்களை தவறானது என்றும், பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தில் எல்லைகள் தான் வாதி உபயோகித்து உள்ளார் என்றால் ஆவணத்தை பார்த்து தான் சொல்ல முடியும். கோதை அவர்கள் கிரையம் பெற்ற வாசா 9 கிரைய ஆவணத்தின் படி பி .வாசா.ஆ 1, பி.வாசா.ஆ 2, பி.வாசா.ஆ 4 மற்றும் பி.வா.சா 5 வரை உள்ள பொது அதிகார பத்திரங்களின் அடிப்படையில் தான் மேற்படி கோதை என்பவர் 2005 இல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் நான் 2021 இல் அறிக்கை கொடுத்தேன். தற்போது வேறு அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். அதனால் ஆவணங்களை பார்த்துவிட்டு தான் சொல்ல முடியும். கிரையத்தை பதிவு செய்யும்போது பதிவு செய்யப்படாத பொது அதிகார பத்திரத்தை முன்னிலைக்கு வந்த கிரையம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் பொது அதிகார பத்திரத்தை கட்டாயமாக பதிவு செய்ய வேண்டும் என்ற சுற்றறிக்கை 1.12.2012ல் தான் போடப்பட்டது. பதிவு செய்யப்படாத பொதுஅதிகாரத்தின் அடிப்படையில் கிரையம் பதிவு செய்யக்கூடாது என்று 40 ஆண்டு காலமாக சட்டம் உள்ளது என்றால் அதைப் பற்றி தெரியவில்லை. கோதை நிலத்திற்கான நாலு எல்லைகளை நான் நேரடியாக சென்று ஆய்வு செய்தேனா என்றால் இல்லை. காலி நிலத்தை ஆய்வு செய்ய வேண்டும் என்று அவசியம் இல்லை. மேல் குறிப்பிட்ட பொது அதிகார பத்திரங்கள் அனைத்திலும் டவுன் சர்வே எண் 13 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் அதை ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். டவுன் சர்வே எண் 13 என்பது மின்சார வாரியத்திற்கு சொந்தமான நிலம் என்றால் அதைப் பற்றி தெரியவில்லை. டவுன் பீல்டும் புஞ்சையும் சர்வே எண்ணும் மாறுபடும். என்னிடம் காட்டப்படும் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்துள்ள செயல்முறை ஆணையை பற்றி

எனக்கு தெரியாது. என்னுடைய அறிக்கையின் பெயரில் பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று மாவட்ட பதிவாளர் உத்தரவிட்டுள்ளார் என்றால் சரிதான். 28.01.2022 தேதியன்று பதிவு செய்யப்பட்ட பத்திரம் மாவட்ட பதிவாளரால் ரத்து செய்யப்பட்ட விவரம் தெரியும். அந்த உத்தரவை எதிர்த்து பதிவுத் துறை துணைத்தலைவர் அவர்களிடம் மேல் முறையீடு செய்து அதன்படி உத்தரவு ரத்து செய்யப்பட்டு மேற்படி விஷயத்தை உரிமையியல் நீதிமன்றம் தான் முடிவு செய்ய முடியும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் அதை பற்றி தெரியாது. மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் 1739/2021 என்ற அடமான பத்திரம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அது சம்பந்தமாக நான் வங்கிக்கு கடிதம் அனுப்பினேன் என்றால் சரிதான். 15.07.2021 தேதியிட்ட நான் இந்தியன் வங்கி மேலாளருக்கு அனுப்பிய கடிதம் **பி,வா,சா ஆ 14 ஆக குறியீடு செய்தேன்**. மற்றும் அந்த கடிதத்திற்கு இந்தியன் வங்கி மேலாளர் அவர்கள் அனுப்பிய 26/8/2021 தேதி இட்ட பதில் கடிதம் **பி.வாசா.ஆ15 ஆக குறியீடு செய்தேன்.** என்னுடைய அலுவலகப் பணியை சரிவர செய்யாமல் ஆவணங்களை முறையாக ஆய்வு செய்யாமல் தவறான ஒரு அறிக்கையை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>3 மற்றும் 4 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

காலியான இடத்திற்கு களப்பணி தேவையில்லை என்று சொன்னேன் என்றால் சரிதான். குறிப்பிட்டுள்ள மதிப்பிற்கு மேல் இருந்தால் களப்பணி செய்ய வேண்டியது அவசியம் என்றால் சரியல்ல. வாசா 24 அறிக்கை வழங்குவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட முன் பத்திரங்களை வரவழைத்து பார்த்தேனா என்றால் ஆவணங்களை எங்கள் அலுவலகத்திலிருந்து எடுத்து பார்த்தேன். 2005 இல் போடப்பட்ட அப்துல் காதர் அவர்களின் பத்திரங்களையும் பார்த்தேனா என்றால் பார்த்தேன். அந்த பத்திரத்தில் நாலு

பதிவு செய்யப்பட்ட பொது அதிகார பத்திரங்களும் இரண்டு பதிவு செய்யப்படாத பொது அதிகார பத்திரங்களும் குறிப்பிட்டுள்ளது அதை நான் வரவழைத்து பார்த்தேனா என்றால் அதை வரவழைத்து பார்க்கவில்லை. அப்துல் காதர் மனைவி இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை பார்த்தேனா என்றால் இல்லை. வாசா ஆ 24 அறிக்கையில் அப்துல் காதர் அவர்களின் மனைவி எந்த ஆண்டு இறந்தார் என்று துல்லியமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் முன்ன ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள விவரங்களை குறிப்பிட்டுள்ளேன். முன்னாவணங்கள் என்று நான் குறிப்பிடுவது எந்த ஆண்டுக்குரிய ஆவணம் என்றால் கோதை மற்றும் லலிதாபாய் ஆகியோர் செய்து கொண்ட பத்திரங்களுக்கு முன்னிருக்கும் ஆவணம். கோதை கிரயம் ஆவணத்தில் 1946 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற சொத்து ஆட்சியரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதை பார்த்தேன். மேற்படி ஆவணங்களை ஆய்வு செய்வதற்கு கோதை அல்லது மற்றவர்களுக்கு அழைப்பானை அனுப்பினேனா என்றால் இல்லை. பத்திரங்களில் உள்ள நான்கு எல்லைகளை நேரடியாக சென்று பார்வையிடாமலேயே நான் அலுவலகத்தில் வைத்து எனது அறிக்கையை தயாரித்தேன் என்றால் அலுவலகத்தில் உள்ள முன் ஆவணங்களை வைத்து தயாரித்தேன். 1942 லலிதா பாய் அவர்களின் பத்திரத்தை பார்த்துள்ளேன். என்னுடைய அறிக்கையில் 1942 பத்திரத்தில் நான்கு எல்லைகள் குறிப்பிடவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆவணங்களை பார்த்து தான் அறிக்கையில் எழுதினேன். என்னிடம் காட்டப்படும் வாசா 3 ஆவணத்தில் நான்கு எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் சான்றிட்ட நகலில் வித்தியாசங்கள் இருப்பதால் ஆவணத்தை பார்த்து தான் சொல்ல முடியும். வா சா ஆ 24 அறிக்கையில் ராஜசேகர் அவர்கள் கிரயம் வாங்கிய 2011 இல் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் நான்கெல்லை

விவரங்கள் இல்லை என்று எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பொது அதிகார பத்திரம் அப்துல் காதர் வகையறா கொடுத்ததை ராஜசேகர் பதிவு செய்து கொண்ட பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் நான் முன் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். முன் ஆவணங்களை பார்க்காமல் வாசாஆ 24 அறிக்கையை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நான்கு ஆண்டுகள் ஆனதால் விவரங்கள் மறந்துவிட்டது. சேகர் என்பவர் 2022 ஆம் ஆண்டு பதிவுத்துறை துறைத் தலைவராக இருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 08.08.2022 தேதியிட்ட உத்தரவு சென்னை மண்டல துணை பதிவுத்துறை தலைவர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால் சரிதான். அது **பி.வா.சா ஆ 16 ஆக குறியீடு செய்தேன்.** லலிதாபாய், ராஜசேகர் அவர்களுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். அதில் வா சா ஆ 11 ல் ஜக்குபந்தி விவரங்கள் என்ன குறிப்பிட்டுள்ளது என்றால் அதில் ஜக்குபந்தி விவரங்கள் இல்லை. ஆனால் என்னுடைய அறிக்கையில் ராஜசேகர் என்பவர் அவருக்கு உரிய முன் ஆவணங்களின் விவரங்களை குறிப்பிடாமல் கோதை அவர்கள் கிரயம் பெற்ற நிலத்தின் எல்லைகளை குறிப்பிட்டுள்ளார் என்று எதன் அடிப்படையில் என்னுடைய அறிக்கையில் எழுதியுள்ளேன் என்றால் ராஜசேகரின் முன்னாவணங்களில் எல்லைகள் குறிப்பிடவில்லை என்பதால் அதன் அடிப்படையில் என்னுடைய அறிக்கையில் கூறியுள்ளேன். என்னுடைய அறிக்கையில் இரண்டு நபர்கள் என்று நான் குறிப்பிட்டுள்ளது கோதை அம்மாள் மற்றும் லலிதாபாய். ராஜசேகர் கிரயம் கொடுத்த பத்திரத்தை பற்றி தான் என்னுடைய அறிக்கையில் பத்தி ஆறில் குறிப்பிட்டுள்ளேன். கோதை அவர்களின் பத்திரத்தை பற்றி விவாதம் செய்யாததற்கு காரணம் என்ன என்றால் இரண்டையும் தான் கூறியுள்ளேன். வேணுகோபால் நிலம் மற்றும் வேணுகோபால் தெரு

இரண்டும் ஒன்றா என்றால் இல்லை. என்னுடைய அறிக்கையில் பொது அதிகார பத்திரங்களை பற்றி எதுவும் குறிப்பிடாததற்கு என்ன காரணம் என்றால் வில்லங்கத்தில் வரும் பதிவுகள் பற்றி மட்டும் தான் நான் குறிப்பிட்டுள்ளேன். மின்சார வாரியத்தில் இருந்து எங்களுக்கு அது தங்களுடைய இடம் என்று கடிதம் அனுப்பினார்களா என்றால் நான் அப்போது இந்த அலுவலகத்தில் இல்லை என்பதால் அதைப் பற்றி தெரியாது. 1918 பத்திரத்தில் சர்வே எண் 13–ல் எவ்வளவு ஐட்டங்கள் இருந்தது என்றால் தெரியவில்லை. ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். 1918 பத்திரத்தை குறித்து எனது அறிக்கையில் எதன் அடிப்படையில் குறிப்பிட்டேன் என்றால் 1942 பத்திரத்தில் உள்ள ஆவண வாசகங்களின் அடிப்படையில் அதில் குறிப்பிட்டுள்ளேன். கோதை கிரயம் பெற்ற பத்திரத்தில் நகர அளவை எண் 17 மற்றும் 18 என்று குறிப்பிட்டுள்ளது என்றால் அந்த பத்திரத்தை நான் பதிவு செய்யவில்லை. அந்த பத்திரத்தில் மேற்படி சர்வே நகர அளவை எண் குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிட்டுள்ளது. தாய் பத்திரத்தில் 13 என்ற சர்வே எண் குறிப்பிட்டுள்ள நிலையில் ஒப்பு நோக்கு ஆவணம் எதுவும் நான் பார்த்தேனா என்றால் இல்லை. எந்த ஆவணங்களையும் பரிசீலனை செய்யாமல் தன்னிச்சையாக நான் அறிக்கை சமர்ப்பித்து உள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

(Sd/- Deepthi Arivunithi)
Principal District Court,
Kancheepuram.